அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 17/2018

எனது இல: EST-4/02/ MSF/0419
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.08.23

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்

**கௌரவ அமைச்சர்களினதும்/ பிரதியமைச்சர்களினதும் உதவிப் பணியாட்தொகுதிக்குரிய முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அடிப்படை சேவை வகுதிக்குரிய ஊழியர்களை நிரந்தரமாக்கல்**

கௌரவ அமைச்சர்களினதும்/ பிரதியமைச்சர்களினதும் பணியாட்தொகுதிக்கு அரசாங்க சேவைக்கு புறம்பாக ஆட்சேர்க்கப்பட்ட பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஊழியர்களை நிரந்தரமாக்குவதென 2016.10.11 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

i கௌரவ அமைச்சர்களினதும் / பிரதியமைச்சர்களினதும் பணியாட்தொகுதிக்கு அரசாங்க சேவைக்கு புறம்பாக ஆட்சேர்க்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சேவையினதும், ஆரம்ப சேவை வகுதிக்குரிய பதவியொன்றில் வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களும் உள்ளடங்களாக தொடர்ந்தேச்சையான 03 ஆண்டுகால சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களை நிரந்தரமாக்குதல்.

ii. நியமிக்கப்படும் பதவிகளுக்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைய குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

02. இதன் கீழ் நிரந்தரமாக்குவதற்கு தகைமைபெறும் அனைத்து ஊழியர்களையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நிரந்தர சேவையில் நியமிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

i முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களை அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் பதவிகளை விட கீழான சேவை வகுதியைச் சேர்ந்த திணைக்கள ரீதியான பதவிகளுக்கு நியமித்தல்.

ii. ஆரம்ப சேவை வகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் இணைந்த சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறித்தொதுக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் அவர்களை இணைந்த சேவைகளுக்குரிய பதவிகளுக்கு நியமித்தல்.

iii. அலுவலர்களை பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பாக தமது அமைச்சிலோ அல்லது அமைச்சுக்களிலோ உரிய நிறுவனங்களிலோ பதவி வெற்றிடங்கள் இல்லாதிருப்பின் ஏனைய அமைச்சுக்களின் நியமன அதிகாரிகளிடம் வினவப்பட்டு, அப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.

iv. அவ்வாறே நிரந்தர பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட அலுவலர்களை கௌரவ அமைச்சர்களினதும்/ பிரதியமைச்சர்களினதும் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் மாத்திரம் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட பதவிகளுக்கு உரியதான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இணைப்புச் செய்தல்.

ஒப்பம்/. பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு